**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை:- செல்வி. D. பூர்ணிமா, B.A.B.L.(Hons.),LL.M.,**
**நீதித்துறை நடுவர், தேவகோட்டை.**

**2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 24-ம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057 குரோதி வருடம் பங்குனி திங்கள் 10-ம் நாள்**

**S.T.C. No. 347/2023**
(குற்ற எண்.236/2018, தேவகோட்டை தாலுகா காவல் நிலையம்)

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
தேவகோட்டைதாலுகா காவல்நிலையம்,
குற்ற எண்.236/2018.

….குற்றமுறையிடுபவர்

/எதிராக/

1.ராஜா (31/2018)
த/பெ. பூசைத்துரை

…..எதிரி

குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 விதி 106(4)ன் படி
வழக்கின்சுருக்கம்

| வ.எண் | விளக்கம் | விபரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்,<br>தேவகோட்டைதாலுகா<br>காவல்நிலையம்,<br>குற்ற எண்.236/2018. |
| 2. | எதிரிகள் | 1.ராஜா<br>த/பெ. பூசைத்துரை<br>**<u>முகவரி:</u>**<br>கிழவன்குடி, சிறுவாச்சி,<br>தேவகோட்டை தாலுகா. |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | குற்றச்சாட்டுகள் | எதிரி மீது பிரிவு 4(1)(a) TNP Act-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. | | |
| 4. | சம்பவம் நடந்த நாள் | 27/10/2018 | | |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 27/10/2018 | | |
| 6. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | 27/10/2018<br>02/11/2018 Bailed by Court | முன்பிணை பெற்ற நாள்:இல்லை | |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 13/06/2023 | | |
| 8. | கு.வி.மு.ச பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 03/07/2024 | | |
| 9. | கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | ----- | | |
| 10. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 10/03/2025 | 10/03/2025 |
| | | அ.சா.2 | 12/03/2025 | 12/03/2025 |
| | | அ.சா.3 | 21/01/2026 | 21/01/2026 |
| 11. | எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | 10/02/2026 | | |
| 12. | எதிரிகளின் மீது பிடியாணை | பிடியாணை | பிடியாணை | |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | வழங்கப்பட்ட நாள் | திரும்ப பெறப்பட்ட நாள் |
| | | ------ | ----- |
| 13. | வழக்கு விசாரணை தொடங்கிய நாள் | 03/07/2024 | |
| 14. | வழக்கு விசாரணை முடிந்த நாள் | 10/02/2026 | |
| 15. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 24/03/2026 | |
| 16. | தீர்வு | **முடிவாக, எதிரி பிரிவு 4(1)(a) TNP Act-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை குவிமுச பிரிவு 255(1)-ன்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.** | |

இந்த வழக்கானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.செல்வகணபதி, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

**1. குற்றமுறையீட்டின் சுருக்கம்:-**

கடந்த 27-10-2018ம் தேதி மதியம் சுமார் 13.00 மணிக்கு சிறுவாச்சி பஸ் ஸ்டாப் அருகே எதிரி எந்தவித அரசு அனுமதியும் இன்றி பிறருக்கு அதிக விலைக்கு விற்பனை செய்து லாபம் பெறும் நோக்கத்துடன் சுமார் 180 மி.லி அளவுள்ள DAY NIGHT BRANDY -28 பாட்டில்களை வெள்ளை நிற சாக்கு பையில் மூடி திறந்த நிலையில் வழக்கத்திற்கு மாறாக விஷ நெடி உடைய வாடை கொண்ட நிலையில் விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி மீது பிரிவு 4 (1-A) TNP Act-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 இன் படி எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரி மீது பிரிவு 4(1)(a) TNP Act-ன் கீழ் குற்றச்சாட்டுகளின் சாரம்சத்தை விளக்கி வினவிய போது எதிரி குற்றங்களை மறுத்துரைத்தார். எனவே அரசு தரப்பு சாட்சியங்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ7 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

(5.1) அ.சா.1 ராஜ்குமார் தனது சாட்சியத்தில் தான் கடந்த 2018ம் வருடம் தாலுகா காவல்நிலையத்தில் பணிபுரிந்தபோது 27.10.2018ம் தேதி சார்பு ஆய்வாளர் மீனாட்சி சுந்தரம் மற்றும் தலைமை காவலர் முத்துராமன் ஆகியோருடன் சிறுவாச்சி பஸ்ஸ்டாப்பில் வாகன தணிக்கை செய்துகொண்டிருந்தபோது எதிரி வண்டியை நிப்பட்டாமல் திரும்பி செல்ல முயன்றார் என்றும் அவரை விசாரித்தபோது அவரிடம் 28 பாட்டில்கள் மேல் இருந்தது என்றும் மேற்படி பாட்டில்கள் திறந்து மூடப்பட்டிருந்தது என்றும் அதன் வாசனை வேறு மாதிரி இருந்தது என்றும் அதனால் நிலையம் கொண்டுவரப்பட்டது என்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் அது அ.த.சா.ஆ.1 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.2) அ.சா.2 முத்துராமன் தனது சாட்சியத்தில் தான் தேவகோட்டை தாலுகா காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக 27.10.2018ம் தேதி மதுவிலக்கு சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் மீனாட்சி சுந்தரம் அவர்களுடன் தானும், காவலர் ராஜ்குமார் ஆகியோர்களுடன் சிறுவாச்சி பஸ்ஸ்டாப் அருகில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து செய்துகொண்டிருந்தபோது மதியம் 13.00 மணிக்கு சிறுவாச்சி பஸ்ஸ்டாப் அருகே ஒரு இருசக்கர வாகனம் ஹோண்டா ஐசாக் என்ற பதிவெண் இல்லாத வண்டி வந்தது என்றும் எங்களை கண்டதும் தப்பித்து ஓடுவதற்காக முயன்றவரை சுற்றி வளைத்து பிடித்தோம் என்றும் பின்னர் பெயர், விலாசம் கேட்டபோது எதிரி விவரத்தை சொன்னார் என்றும் அவரது வைத்திருந்த பையை சோதனை

செய்தபோது 180 மி.லி பிளாக்பேரல் பிராந்தி பாட்டில்கள் இருந்தது என்றும் மேற்படி பாட்டில்களை சோதனை செய்தபோது சீல் உடைக்கப்பட்டு மூடி திருகிய நிலையில் இருந்தது என்றும் மேற்படி பாட்டில்களை முகர்ந்து பார்த்தோம் என்றும் நெடிய வாடை வந்தது என்றும் எதிரி அரசு அனுமதி இல்லாமல் இலாப நோக்கத்தோடு, மேற்படி பிராந்தி பாட்டில்களை வைத்து விற்பனை செய்ய வைத்திருந்தார் என்றும் சார்பு ஆய்வாளர் காரணம் கூறி கைது செய்தார் என்றும் மதியம் 13.15 மணிக்கு எதிரியிடமிருந்து கைப்பற்றிய பாட்டில்களை அந்த இடத்தில் கைப்பற்ற யாரும் சாட்சிகள் முன்வராததால் போலீஸ் பார்டியாகிய எங்கள் இருவர் முன்னிலையில் கைப்பற்றி 13.30 மணிக்கு எதிரி ஹோண்டா ஐசாக் வாகனத்தை கைப்பற்றினோம் என்றும் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களை 17.00 மணிக்கு நிலையம் வந்து தேவகோட்டை தாலுகா குற்ற எண்: 236/2018 ஆக வழக்கு பதிவு செய்தார் என்றும் தாங்கள் உதவியாக இருந்தோம் என்றும் சார்பு ஆய்வாளர் கைப்பற்றிய அத்தாட்சியில் தானும், காவலர் ராஜ்குமார் என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றும் கைப்பற்றிய பிராந்தி பாட்டில்களில் நான்கு பாட்டில்களை சீல் வைத்து தனியாக சார்பு ஆய்வாளர் எடுத்தார் என்றும் அத்தாட்சியில் ஆங்கிலத்தில் கையொப்பம் இடப்பட்டுள்ளது என்றும் தன்னுடையது இல்லை என்றும் அதே வழக்கு சொத்துக்களுக்கு அத்தாட்சியில் சாட்சி 1ஆக உள்ள கையெழுத்து தன்னுடையது தான் அது அ.த.சா.ஆ.2 என்றும் தான் மற்றொரு அத்தாட்சியிலும் கையெழுத்து செய்துள்ளேன் என்றும் அது டைப் செய்யப்பட்டு இருந்தது என்றும் சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(5.3) அ.சா.3 மீனாட்சிசுந்தரம் தனது சாட்சியத்தில் தான் தற்போது அடையார் மதுவிலக்கு பிரிவு கவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும் கடந்த 27/10/2018ஆம் தேதி ரோந்து சென்று எதிரியிடமிருந்து மதுபாட்டில்களை கைப்பற்றியது பற்றியும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும் எதிரியை கைது செய்தது குறித்தும் மதுபாட்டில்களை அழித்தது குறித்தும் வழக்குப்பதிவு செய்து புலன்விசாரணை மேற்கொண்டது குறித்தும் சாட்சியம் அளித்து மதுபாட்டில்களுக்கான அத்தாட்சி மகஜரை அ.சா.ஆ.3 ஆகவும், இருசக்கர வாகனத்திற்கான அத்தாட்சி மகஜரை அ.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கையை அ.சா.ஆ.5 ஆகவும், இருசக்கர வாகனத்திற்கான படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகவும், மதுபாட்டில்களுக்கான படிவம் 91– அ.சா.ஆ.7 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாகத் தோன்றும் அம்சங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(b) இன் கீழ் வினவ எதிரி சாட்சியங்களை பொய் என மறுத்துரைத்தார். மேலும் எதிரி தனது தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

**8. தீர்வு**

(8.1) கடந்த 27/10/2018 ஆம் தேதி அ.சா.1முதல் 3 வரையிலானவர்கள் சிறுவாச்சி பஸ் நிறுத்தம் அருகில் ரோந்து சென்று கண்காணித்த போது மதியம் 1.00 மணிக்கு சிறுவாச்சி பஸ் ஸ்டாப் அருகே வெள்ளை நிற சாக்குப்பையுடன் இருசக்கர வாகன Honda Grazia என்ற பதிவெண் இல்லாத வண்டியில் எதிரி சாக்குப் பையில் 180ml அளவுள்ள Day Night Brandyபாட்டில்கள் 28 எண்ணிக்கை விற்பனைக்காக வைத்திருந்தார் என்பதே அரசு தரப்பு வழக்கு ஆகும்.

(8.2) கைப்பற்றுதலுக்கான சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் 27/10/2018 ஆம் தேதி அ.சா.3 மற்றும் அ.சா.2 உடன் சிறுவாச்சி பஸ் ஸ்டாப்பில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது எதிரி வண்டியை நிப்பாட்டாமல் திரும்பி செல்ல முயன்றதாகவும் அவரை விசாரித்த போது அவரிடம் 28 பாட்டில்கள் மேல் இருந்ததாகவும், பாட்டில்கள் திறந்து மூடப்பட்டிருந்ததாகவும், அதன் வாசனை வேறு மாதிரி இருந்ததாகவும் அதனால் நிலையம் கொண்டு வரப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.1 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தின் பத்தி 1-ல் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து தாலுகா காவல் நிலையத்தில் வைத்து சார்பு ஆய்வாளரால் பெறப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கையின் படி 13.15 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அ.சா.3 விசாரணை அதிகாரியும் அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தின் பத்தி 2-ல் சம்பவ இடத்தில் அத்தாச்சி மகஜர் தயார் செய்த பிறகு தான் எதிரியை காவல் நிலையத்திற்கு

அழைத்துச் சென்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1ன் சாட்சியத்தில் மது பாட்டில்கள் 27/10/2018 ஆம் தேதி எத்தனை மணிக்கு கைப்பற்றப்பட்டது என்பது குறித்தும், எத்தனை மணிக்கு ரோந்து சென்றார்கள் என்பது குறித்தும் எந்த விளக்கமும் இல்லை. எனவே அ.சா.1ன் சாட்சியம் அத்தாட்சி மகஜரானது சம்பவ இடத்தில் வைத்து மது பாட்டில்களை கைப்பற்றும்போதுதான் தயார் செய்யப்பட்டதா என்ற சந்தேகத்தை எழுப்பும் விதமாக அமைந்துள்ளது.

(8.3) கைப்பற்றுதலுக்கான மற்றொரு சாட்சியான அ.சா.2 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் 27/10/2018 ஆம் தேதி அ.சா.1 முதல் 3 வரையிலானவர்கள் சிறுவாச்சி பஸ் ஸ்டாப் அருகில் ரோந்து செய்து கொண்டிருந்த போது மதியம் 1.00 மணிக்கு சிறுவாச்சி பஸ் ஸ்டாப் அருகே ஹோண்டா ஐசாக் என்ற பதிவெண் இல்லாத இருசக்கர வாகனம் வந்ததாகவும் தங்களை கண்டதும் தப்பிஓட முயன்றவரை வளைத்து பிடித்து விசாரித்ததாகவும் அப்போது எதிரி விவரத்தை சொன்னதாகவும் அவர் வைத்திருந்த பையை சோதனை செய்தபோது 180 மி.லி பிளாக் பேரல் பிராந்தி பாட்டில்கள் இருந்ததாகவும் அவைகளை சோதனை செய்தபோது சீல் உடைக்கப்பட்டு மூடி திருகிய நிலையில் இருந்ததாகவும் மதியம் 13.15 மணிக்கு எதிரிடமிருந்து கைப்பற்றிய பாட்டில்களை அந்த இடத்தில் கைப்பற்ற சாட்சிகள் யாரும் முன் வராததால் போலீஸ் பார்ட்டி ஆகிய தாங்கள் இருவர் முன்னிலையில் கைப்பற்றி 13.30 மணிக்கு எதிரி ஹோண்டா ஐசாக் வாகனத்தை கைப்பற்றியதாகவும் சாட்சியமளித்துள்ளார். அரசு தரப்பு வழக்குப்படி எதிரி பயன்படுத்திய வாகனம் Honda Grazia வாகனமாகும். அ.சா.ஆ.4 அத்தாட்சி மகஜரிலும் Honda Grazia என்ற

வாகனமே கைப்பற்றப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.2 அவருடைய முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரி ஹோண்டா ஐசாக் என்ற வாகனத்தில் வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அரசு தரப்பு வழக்குப்படி எதிரியிடமிருந்து Day Night Brandy என்ற வகை மது பாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டு அ.சா.ஆ.3அத்தாட்சி மகஜரிலும் அவ்வாறே கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், அ.சா.2 அவருடைய சாட்சியத்தில் பிளாக்பேரல் என்ற வகை மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டதாக அரசு தரப்பு வழக்கிலிருந்து முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

(8.4) அ.சா.2 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தின் பத்தி 1-ல் சம்பவ இடமான சிறுவாச்சி பஸ் ஸ்டாப் அருகே நிறைய கடைகள் இருந்ததாகவும் பொதுமக்கள் நடமாட்டம் இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அவ்வாறு சம்பவ இடமானது பொதுஇடமாகவும் மக்கள் நடமாட்டம் உள்ள இடமாகவும் உள்ள நிலையில் சம்பவமும் பகல் 1.00 மணிக்கு நடைபெற்றுள்ள நிலையில் கைப்பற்றுதலுக்கான சாட்சிகளாக தனிநபர் சாட்சிகள் விசாரிக்கப்படாமல் கைப்பற்றுதலுக்கான சாட்சிகளான அ.சா.1, 2 ஆகிய இருவருமே காவல்துறை சாட்சிகளாக உள்ளார்கள். அ.சா.3 அவருடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் பத்தி 1-ல் பொதுமக்கள் யாரும் சாட்சிகளாக இருக்க முன்வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவ்வாறு எந்தெந்த நபர்களை அழைத்தார்கள் என்பது குறித்து எந்த விவரமும் இல்லை. மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியாக உள்ள சம்பவ இடத்தில் சில தனிநபர்கள் சாட்சியாக இருக்க மறுத்து இருந்தாலும் தனிநபர் சாட்சிகள் யாருமே கிடைக்கவில்லை என்ற

காரணம் சந்தேகத்தை எழுப்புவதாகவே உள்ளது. அ.சா.1 மற்றும் 2 ஆகியோர் காவல்துறை சாட்சிகளாக உள்ள ஒரே காரணத்திற்காக மட்டுமே அவர்களுடைய சாட்சியத்தை புறம் தள்ளிவிட முடியாது என்ற போதிலும் சம்பவ இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள இடமாக உள்ள நிலையில் தனிநபர்கள் யார் யாரை அழைத்து அவர்கள் மறுத்தார்கள் என்பது போன்ற எந்த விவரமும் இல்லாத நிலையில் அ.சா.1, 2 ஆகியோரின் சாட்சியத்திலுள்ள முரண்பாடுகளையும் கருத்தில்கொள்கையில் அரசு தரப்பில் வழக்கில் கண்ட மதுபாட்டில்கள் எதிரியிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டது என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அரசு தரப்பு வழக்குப்படி எதிரி விற்பனைக்காக வழக்கில் கண்ட மதுபாட்டில்களை வைத்திருந்ததாக குறிப்பிட்டுள்ளநிலையில் அவ்வாறு எதிரி விற்பனை செய்ததாகவோ எதிரியிடமிருந்து மதுபாட்டில்களை வாங்கியதாகவோ எந்த நபரும் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மேலும் எதிரியிடமிருந்து மதுபாட்டில்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைக்கப்பெற்ற பணம் என்ற வகையில் எந்த பணமும் கைப்பற்றப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது ஆகும். கைப்பற்றப்பட்ட பாட்டில்களில் 4 பாட்டில்கள் தனியாக முத்திரையிடப்பட்டு சோதனைக்காக எடுக்கப்பட்டதாக அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் கைப்பற்றப்பட்ட பாட்டில்களில் உள்ளவை மதுதான் என்பதை நிரூபிக்க அவை தடயவியல் ஆய்விற்கு அனுப்பப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது ஆகும். எனவே மேற்கண்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளையும், விவாதங்களையும், சாட்சியங்களில் உள்ள முரண்பாடுகளையும் கருத்தில்கொள்கையில்

சந்தேகத்தின் பலனை பெற எதிரி தகுதி உடையவர் ஆகிறார் என்றும் எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**9. முடிவாக, எதிரி பிரிவு 4(1)(a) TNP Act-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை குவிமுச பிரிவு 255(1)-ன்கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

**10. இவ்வழக்கின் PR No. 6/2019-ல் கைப்பற்றப்பட்ட பதிவெண் எழுதப்படாத Honda Grazia கருப்பு கலர் இருசக்கர வாகனம் -01க்கு Crlmp 7076/2018-ல் பிறப்பிக்கப்பட்ட 10/01/2019ம் தேதியிட்ட உத்தரவின் படி வழங்கப்பட்ட இடைக்காலப் பொறுப்பானது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு முழுமையடைய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கின் PR No. 5/2019-ல் 1வது ஐட்டமாக கைப்பற்றப்பட்டுள்ள 180 ml பிடிக்கக்கூடிய மூடிய முத்திரையுடன் SHO Seal வைத்த Day Night Brandy பாட்டில்கள் -04 மற்றும் 2வது ஐட்டமாக கைப்பற்றப்பட்டுள்ள 180ml பிடிக்கக்கூடிய Day Night Brandy பாட்டில்கள் -24 மொத்தம் 28 பாட்டில்களில் உள்ள மதுபானத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழித்து வெற்று மதுபாட்டில்களை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அரசுடைமையாக்க உத்தரவிடப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால்

சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 24-ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டடது.

POORNIMA Digitally signed by POORNIMA Date: 2026.03.24 19:01:37 +0530

**நீதித்துறை நடுவர்**
**தேவகோட்டை.**

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

| S.No | Witness of the Prosecution | How examined | Description of the Witness |
|---|---|---|---|
| 1. | ராஜ்குமார் (தலைமை காவலர்) | அ.சா.1 | கைப்பற்றுதலுக்கான சாட்சி |
| 2. | முத்துராமன் (தலைமை காவலர்) | அ.சா.2 | கைப்பற்றுதலுக்கான சாட்சி |
| 3. | மீனாட்சி சுந்தரம் (காவல் ஆய்வாளர்) | அ.சா.3 | விசாரணை அதிகாரி |

**<u>Judicial Form No. 68</u>**
**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| S.No of the exhibit | Description of the exhibit | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | அத்தாட்சியில் உள்ள கையெழுத்து | 10/03/2025 | அ.சா.ஆ.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | அத்தாட்சியில் சாட்சி 1ஆக உள்ள கையெழுத்து | 12/03/2025 | அ.சா.ஆ.2 | அரசு தரப்பு | அசல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | மதுபாட்டில்களான அத்தாட்சி மகஜர் | 21/01/2026 | அ.சா.ஆ.3 | அரசு தரப்பு | அசல் |
| 4. | இருசக்கர வாகனத்திற்கான அத்தாட்சி மகஜர் | 21/01/2026 | அ.சா.ஆ.4 | அரசு தரப்பு | அசல் |
| 5. | முதல் தகவல் அறிக்கை | 21/01/2026 | அ.சா.ஆ.5 | அரசு தரப்பு | அசல் |
| 6. | இருசக்கர வாகனத்திற்கான படிவம் 91 | 21/01/2026 | அ.சா.ஆ.6 | அரசு தரப்பு | அசல் |
| 7. | மதுபாட்டில்களுக்கான படிவம் 91 | 21/01/2026 | அ.சா.ஆ.7 | அரசு தரப்பு | அசல் |

**அரசு தரப்பு சான்றுப் பொருள்: இல்லை**

**எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுப் பொருள் - இல்லை**

POORNIMA

Digitally signed by POORNIMA
Date: 2026.03.24 19:01:45 +0530

**நீதித்துறை நடுவர்**
**தேவகோட்டை.**

**பின்குறிப்பு:-**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
3. விசாரணை காலத்தில் சாட்சிகள் யாரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.